NATIONAL GALLERY SINGAPORE

DALAM
SOUTHEAST ASIA

# FIGURING A SCENE

## ஒரு காட்சியைக் கண்டறிதல்

ஒரு கண்காட்சியின் ஊடாக நாம் நடக்கும்போது, சில கலைப்படைப்புகள், அவற்றின் வடிவங்கள், வண்ணங்கள்,கலைநயம் இவற்றால் அமைப்புகளால் ஈர்க்கப்படுவதை நாம் உணரலாம். இயற்கையாகவே, இவ்வடிவங்களை நமக்குத் தெரிந்தவற்றுடன் தொடர்புப்படுத்துவதன் வழியாக நாம் அவற்றைப் புரிந்துகொள்ள முயற்சிக்கிறோம். ஆயினும், இக் கலைப்படைப்புகளின் முக்கியத்துவத்தைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வத் தூண்டலால், அவற்றின் பின்புலத்தில் உள்ள பெரும்பாலான செயல்முறையை நாம் தவறவிடுகிறோம்.

அதன் காரணமாக, நாம் கேட்கிறோம்: இந்த வடிவங்கள் எவ்வாறு உருவாக்கப்பட்டு, உணரப்படுகின்றன? இவை ஒரு கண்காட்சியாகத் தொகுக்கப்படும் போது என்ன நடக்கிறது?

இந்தக் கண்காட்சி, வடிவ உருவாக்கச் செயல்முறையையும், கலையையும் நாம் எவ்வாறு படைக்கிறோம், புரிந்துகொள்கிறோம் என்பதை ஆராய உங்களை அழைக்கிறது. இக்கண்காட்சி கலைஞர்கள் எங்ஙனம் இயற்கையான நிகழ்வுகளையும் பொருள்களையும் ஒரு கதையைக் கூறும் கலையாக அல்லது வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட நினைவூட்டும் கலையாக மாற்றுகிறார்கள் என்பதைக் கண்டறிகிறது. இதை வேறு வகையாகக் கூறவேண்டுமெனில், கலை போன்றநுட்பமான ஒன்றையும், அது இவ்வுலகில் ஒரு பொருட்டாக மாற்றும் வழிமுறை ஆகிய இரண்டையையும் கண்டறிவதற்கான அல்லது உள்ளடக்கும் செயல்முறையை இக்கண்காட்சி ஆராய்கிறது.

இயற்கைக் கூறுகள், சமூக வடிவங்களைப் புரிந்து கொள்ளும் ஒன்றாக ஆவதை பல நிகழ்வுகளின் வழியே 'ஒரு காட்சியைக் கண்டறிதல்;, வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு பழத்தின் மரம், பழத்தின் சிற்பமாக மாறுகிறது. இது சிங்கப்பூர், தென்கிழக்காசியா இவற்றின் சூழலை புகைப்படக்கலை, ஓவியம் ஆகியவற்றின் வழியாக இது நினைவூட்டுகிறது. அல்லது ஒரு தீ விபத்தில் ஒரு பெருநகரம் பிறக்கிறது. ஒரு நிழல் அதன் சொந்த ஒளி மூலத்தை எதிர்க்கிறது, ஒரு விசித்திரமான மணம் அருங்காட்சியகத்தில் ஊடுருவுகிறது. மெழுகு நம்பிக்கையையும், தீவிரவாதத்தையும் உட்பொதிந்துகொள்கிறது.

## நிழல்

கலைஞரான ஷரோன் சின் மலேசியாவில் போர்ட் டிக்சனில் தங்கியிருந்து வேலை செய்கிறார். அங்கு அவர் தெரு விலங்குகள் வந்துசெல்லும் தோட்டத்தைக் கவனித்துக்கொள்கிறார். அவருடைய வீட்டருகே இரவில் ஒளிரும் ஓர் எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை உள்ளது. இது இயற்கை, தொழில்நுட்பம் ஆகிய இரண்டையும்—புவியின் பல்வேறு உயிரினங்கள், உலகளாவிய தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றைக் —கொண்டிருக்கும் ஒரு பதற்றமான சூழலமைப்பாகும்.

பருவநிலை நீதிக்கான அவரது அர்ப்பணிப்பு, சூழலியல் இடப்பெயர்வு குறித்த திறனாய்வு ஆகியவை குறித்து அறிந்திருக்கும், சின் தனது படைப்பில் இந்த பதற்றத்தை உணர்வுப்பூர்வமாக ஆய்வு செய்கிறார். செடெக் சியூவின் "புதிய அரசுகளின் உயிரினங்கள்" (Zedeck Siew's Creatures of New Kingdoms) படத்திற்காக அவர் உருவாக்கிய விலங்குகளின் மெழுகுத்துணிப் பலகை அச்சுக்களிலும் (லினோகட் பிரிண்ட்டுகள்), கோலாலம்பூரில் பருவநிலை-மாற்ற எதிர்ப்புக்காக வடிவமைக்கப்பட்ட தகவலட்டைகளிலும் இதைக் காணலாம்.

இந்த லினோகட் பிரிண்ட்கள், தகவலட்டைகளின் மீட்டுருவாக்கம் நிழல் பொம்மலாட்டத்தின் பொம்மைகளாக செய்யப்படும் முன், ஓர் அருங்காட்சியச் சுவரோவிய வடிவம் பெற்றன. இந்த பொம்மைகள் சின் அவர்களின் தோட்டத்திற்கும், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் நடந்த "புதைப்படிவ முதலாளித்தும்" என்ற ஒளிவழிப் நடக்கும் பொம்மலாட்ட நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக அமைந்து, அரங்கே. இந்த நிறுவலில், இயற்கை, சமூக சக்திகளுக்கு இடையிலான போராட்டத்திலிருந்து வடிவங்கள் அச்சுறுத்தும் வகையிலும், திடீரெனவும் வெளிப்படுகின்றன. இங்குகலைஞர் கேட்கிறார்: "இருள் இல்லாமல், நாம் எப்படி பகலைக் கனவு காண முடியும்?"

# பழம்

சிங்கப்பூர்,தென்கிழக்காசியாவின் இவற்றின் கற்பனையை வடிவமைக்க உதவிய பழமான துரியனை மூன்று படைப்புகள் ஆராய்கின்றன. ஓர் ஓவியம், ஒரு புகைப்படம், ஒரு சிற்பம் ஆகியவை துரியனின் வடிவத்தை வெவ்வேறு வழிகளில் வெளிப்படுத்துகின்றன. சந்தைக்காக மங்குஸ்டீன் பழத்துடன் சேர்ந்து சேகரிக்கப்படுவது, உடைத்துத் திறக்கப்படுவது, விற்பனைக்குத் தயார் செய்யப்படுவது, காவடிக் கூடைகளில் வைக்கப்படுவது, உண்ணப்படுவது என்று துரியன் பயணிக்கும் பாதையின் பல்வேறு கட்டங்களை லியு காங், வரைந்துள்ளார். . பின்னர், ருமேனியக் கலைஞரான கான்ஸ்டான்டின் பிரான்குசியின் ஆதாரங்களையைக் குறிப்பிடும் வகையில் கென்டோங்கனை (ஜாவாவின் இசைக்கருவி) நினைவூட்டும் ஒரு கருத்தியலளவிலான, சிறிய சிற்பத்தை, துரியன் மரத்தைக் கொண்டே அனுசபதி, செதுக்குகிறார். இறுதியாக புக்கிட் பாஞ்சாங் காட்டில் உள்ள ஒரு துரியன் மரத்தை இராபர்ட் ஜாவோ ரென்ஹுய் புகைப்படம் எடுக்கிறார். இது துரியன் மரத்தைச் சுற்றியுள்ள சூழலில் என்ன நடக்கிறது என்பதையும், உணவு சேகரிக்கும் குழுவைச் சேர்ந்த ஒருவர் அதை மிகவும் இனிப்பான பழத்தைச் சுமக்கும் மரமாகக் கருதுவதையும் அழுத்தமாக வெளிப்படுத்தும் சாட்சியாகவும் அமைகிறது.

காலனியக்காலத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகவும், ஆனால் சமகாலத்தில் மிகவும் சர்ச்சைக்குரியதாகவும் கருதப்பட்டு வந்துள்ள துரியன், வரலாற்றிலும் சமகால வாழ்விலும் வெவ்வேறு வேடங்களைத் தரித்துக்கொண்டுள்ளது. இந்த உருமாற்றத்தில், துரியன் எவ்வாறு—இடம்,சொந்தம் குறித்த உணர்வு ஆகியவற்றிற்குத் தேவையான ஆர்வத்திலும்; நிலம், அதன் மூதாதையர்கள்,அதன் குடியேற்றவாசிகள் ஆகியோரின் நினைவுகளிலும்—பண்பாட்டு ரீதியில் பொருள் பொதிந்ததாக மாறியது என்பதை நாம் கண்டறிகிறோம்.

# தீ

1961 இல், புக்கிட் ஹோ ஸ்வீயில் ஒரு துயரமான தீ விபத்து ஹோ ஸ்வீயில் இருந்த கிராமங்கள், குடியிருப்புக்களைச் சூழ்ந்தது. மலாயாவின் சமூக வரலாற்றில் அது ஒரு சிக்கலான தருணமாகும். அட்டாப் குடிசைகளைக் கொண்ட பரந்த, நெரிசலான, 'செயலற்ற' சேரியாக வகைப்படுத்தப்பட்ட புக்கிட் ஹோ ஸ்வீயில் சற்றொப்ப 16,000 மக்கள் வசித்து வந்தனர். நாட்டின் நகர்ப்புற உருமாற்றத்திற்கு இத் தீ விபத்து குறிப்பிடத்தக்க அளவில் உதவியது. இந்த நவீனமயமாக்கத்தின் ஒரு முக்கியமான கூறு, பொது வீட்டுவசதிக் கட்டுமானத்தின் தீவிரமான வளர்ச்சியாகும். லியு காங் Liu Kang, லிம் ஹாக் டாய் Lim Hak Tai, டான் சூ குவான் Tan Choo Kuan, லிம் யூ குவான் Lim Yew Kuan போன்ற கலைஞர்கள் தங்கள் படைப்புகளில் மலாயா, விடுதலையடைந்த சிங்கப்பூர் ஆகியவற்றில் பின்னைக் காலனியக்காலத்தில் நடந்த பல்வேறு தீ விபத்துகள் அழிவையும், ஆக்கத்தையும் உருவாக்கியதைக் குறிப்பிட்டுள்ளனர். இக் கலைஞர்கள் தீயின் தீவிரத்தையும், அதன் பின்விளைவாக மக்கள் தங்களது வாழ்க்கையை மீளுருவாக்க செய்த முயற்சிகளையும் சித்தரித்துள்ளனர். இவ்விதமாக, நீங்கா பழைய நினைவுகள், ஒரு புதிய தொடக்கத்தின் எதிர்பார்ப்பு, அன்றாட வாழ்க்கையின் சித்தரிப்பு போன்ற பொருண்மைகள் அனைத்தும் அவர்களின் படைப்புகளில் உள்ளன. குறிப்பாக, அன்றாட வாழ்க்கையை இவர்கள் சித்தரித்துள்ள முறையானது, நன்யாங் கலைஞர்கள், டென் மென் (பத்து மனிதர்கள்) குழுவினரின் பெயர்பெற்ற சித்தரிப்புகளான வேற்று நிலத் தாவரங்கள் மேய்ச்சல் நிலக்காட்சிகளிலிருந்து , மிகவும் வேறுபட்டு விளங்குகின்றது. சிங்கப்பூரைப் பொறுத்தவரை, புக்கிட் ஹோ ஸ்வீ தீ விபத்து ஒரு திருப்புமுனையாக அமைந்தது; அத் திருப்புமுனை நவீனத்தின் சாத்தியங்களைச் சுட்டிக்காட்டியது; அதே சமயம், அதைத் தொடர்ந்து நடந்த புனரமைப்பு விரைவில் அதன் விரைவிலேயே அதைக் குறித்த விவரிப்பில் ஒரு மைய உருவக வடிவமாக மாறவிருந்தது.

# காற்று

கலையில் காற்றைச் சித்தரிப்பது ஒரு சவால்விடும் அறைகூவல். ஏனென்றால் காற்றை நாம் பார்க்க இயலாது, இருப்பினும் காற்று எங்கும் நிறைந்துள்ளது, வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது. சன் யீ என்ற கலைஞர் மரங்களை அசைக்கும் காற்றை வரைவதன் வழியாக, அதை நம் கண் முன்னர் கொண்டுவருகிறார். தூரிகைக் கோடுகள் வழியாக வெள்ளை வண்ண நிறம் கொண்டு, தூரிகைக் கோடுகள் வழியாக வெள்ளை வண்ண நிறம் கொண்டு, மரங்களின் பகுதிகளைச் சிறிதளவிலும், விட்டுவிட்டும் சிதறிப் பரப்பும் மழையின் துளிகளை அவர் உணர்த்துகிறார். இது புயல் வருவதற்கான ஓர் அறிகுறியாகும்; இது சாய்ந்த ஓவியக் கோடுகளால் மேம்படுத்தப்படும் ஒரு தோற்றமாகும். லிம் சே சுவென் Lim Tzay Chuen தனது ஒளிப்படத்தில், ஓர் உயிரினம் வெளிப்படுத்தும் மேகம்போன்ற நீராவி வடிவிலான பெரமொன் — உடல் ஈர்ப்பைத் தூண்டுவதற்கு ஓர் உயிரினம் சுரக்கும் வேதிமம்—ஐக் காண்கிறோம். இப் படம் 2006 இல் நடந்த முதல் சிங்கப்பூர் இராண்டு கலைக்காட்சி நடத்தப்பட்ட இக்கலைஞரின் நடவடிக்கையைக் குறிக்கிறது. இது அண்மையில் சிங்கப்பூர் தேசியக் காட்சியகத்தின் ஒரு பகுதியாக உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகர மண்டபக் கட்டடத்தில் நடந்தது. ஓவியத் திரையின் மீது மென்மையாக யீ அவர்களால் பூசப்பட்ட வெள்ளை வண்ணப்பூச்சின் புள்ளிகளைப் போல, பரவிய வளிமண்டலத்தின் துகள்கள் மங்கலாகத் தெரிகின்றன. மெதுவாக அடுக்குமாடிக் கட்டடத்தின் படிக்கட்டுகளின் வரையறைகளைச் செதுக்கும் ஒளியுடன், இத் துகள்கள் இறுதியில் தங்கள் சொந்த இருப்பைப் பெறுகின்றன.

# மெழுகு

ரெனாடோ ஹபுலனின் தொகுப்பின் தலைப்பான, டீரா, ஒரு பிலிப்பைன்ஸ் மொழி வார்த்தையாகும். இது பல்வேறுபட்ட பொருள்களைக் கொண்டுள்ளது: இது "எச்சங்கள்" என்று பொருள்படும், அடித்தல் எனவும் பொருள் கொள்ளலாம் அல்லது "குடியிருப்பு" என்பதன் வேர்ச் சொல்லாகவும் இருக்கலாம். மிதந்துவரும் மரங்கள் (டிரிஃப்ட் வுட்), கண்டுபிடிக்கப்பட்ட சிலைகள் உள்ளிட்ட பலவற்றால் இது படைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இப் படைப்பின் மிகவும் சுவையான கூறு, பாரஃபின் மெழுகு ஆகும். இந்த மெழுகில் பல்வேறு பொருள்கள் உட்பொதியப்பட்டுள்ளன. அதில் ஒரு சிற்பம் செதுக்கும் பட்டறையில் காணப்பட்ட, முழுமையடையாத, மாதாகோயிலில் வைக்கப்படாத, முற்றுப்பெறாத, உருமாறிய கிறிஸ்துவின் மரச் சிற்பம் உள்ளிட்டவை வைக்கப்பட்டுள்ளன. இப் படைப்பில் சித்தரிக்கப்பட்டுள்ள காட்சி பிலிப்பைன்ஸில் உள்ள காலனித்துவ சமயமான கத்தோலிக்கத்தைக் குறிக்கிறது.

காலப்போக்கில், இந்த ஆன்மீக அமைப்பு நாட்டுப்புற, பொதுநிலையில் அளிக்கப்பட்ட மறுவிளக்கங்களால் மறுவடிவமைக்கப்பட்டது. இதன் வழியாக பின்னைக் காலனியத்தின் பலவகையான பொருள்கள் (அர்த்தங்கள்), அரசியல் விளைவுகளைப் பெற்றது. இது அமைப்பின் பரவலான செல்வாக்கையும், அதன் சிதறலையும் பிரதிபலித்து, தெற்கு பிலிப்பைன்ஸ் போரின் பயங்கரமான விளைவுகளைப் பெரிதாக்குகிறது. இந்த தொடர்ச்சியான வடிவங்களின் சிதறல் தோற்றத்திற்கிடையே, கலைஞர் ஒரு வகையான தொகுப்பு நிலையை முன்மொழிகிறார். மிதந்துவந்த மரம் (டிரிஃப்ட்வுட்),மெழுகு போன்ற உயிர்மப் பொருள்களுடன் ஓயாமல் நினைவில் ஊடாடும் தோற்றங்களின் சூழலியலை வெளிப்படுத்துகிறார். இக்காட்சி மேடை, பகுதி-பலிபீடம், பகுதி-ஊர்வல வண்டி, பகுதி-கல்லறையாக விளங்குகிறது.

# நகரம்

பொது வீட்டுவசதி, கலை அருங்காட்சியகம் ஆகியவை சிங்கப்பூரின் தேசிய, நவீன வடிவத்திற்கான இரு அடையாளங்களாகும். இந்த இரண்டு தூண்டுதல்களின் தோற்றத்தை பிந்தைக் காலனித்துவ மலாயாவிலிருந்து வெளிப்படும் கருத்தாடல்களில் காணலாம். நவீனத்துவ  நாட்டைக் கட்டியெழுப்புதல், சமூகமயமாக்கப்பட்ட மனிதக் குடியேற்றக் கொள்கை ஆகியவற்றில் உள்ளடங்கிய கட்டடக்கலை, பொறியியல் உரைகள் வழி, இக் கருத்தாடல்களைக் காணலாம். சிங்கப்பூர் விடுதலை அடைந்து ஒரு வருடத்திற்குப் பிறகு எழுதப்பட்ட ஓர் உரை, ஒரு நகரமாகச் சிங்கப்பூரின் பண்பாட்டுப் பங்களிப்பு "தேசிய அடையாளத்தை உருவாக்குவதில் மிகவும் முக்கியமானது" என்று கூறுகிறது. மற்றொரு உரை, 1962 இல் வீட்டுவசதி, மேம்பாட்டு வாரியத்தால் செங்கல், மணல், கருங்கல் (கிரானைட்) பயன்படுத்திக் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்ட செயல்முறையை விவரிக்கிறது. இந்த திட்டத்திற்கான ஊக்கியாக 1961 இல் புக்கிட் ஹோ ஸ்வீயில் ஏற்பட்ட தீ விபத்து அமைந்தது. இத் திட்டம் 1965 இல் சிங்கப்பூர் நாட்டுருவாக்கச் சூழலில் "குடியேறியவர்களைக் குடிமகன்களாக மாற்றியது." கலை,வாழ்விடத்தின் வழியாகப் பண்பாடு, உடல் நலம்  பேணுதல் இவற்றிற்கான ஏக்கத்தைச், சுய் டிட் சிங்கின் ஒரு தேக்கு மரச் சிற்பம். சிக்கலானா விதத்தில் வெளிப்படுத்துகிறது. வெளித்தோற்றத்தில் வினோதமான இந்தச் சித்திரவேலைப்பாடு, மாற்றத்தை ஆவலுடன் எதிர்நோக்கும் சூழலில் ஏற்படும் சோகத்தை அல்லது சோக நிகழ்வின் பின்னணியில் உருவாகும் ஆழ்ந்த மனஅதிச்சியை உணர்த்துகிறது. இறுதியில், வளர்ச்சியின் கற்பனை, உயரமான கட்டிடங்களிலிருந்து வீழ்ந்து மறையும் குடியிருப்பாளர்களின் நாட்டுப்புறக் கதைகளால் சீர்குலைக்கப்படுகிறது. சற்றொப்ப 80 விழுக்காட்டு சிங்கப்பூரார்கள் தற்போது பொது வீட்டுவசதிக் கட்டடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.